**கட்டான பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கட்டான பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கட்டான பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 **கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகக்ளில் உளளடங்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி அணையாளரின் 2020 ஆகஸ்ட் 24 திகதிய மற்றும் LGD/09/2019 (1) இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் படிவம் பிரகாரம் மூலதன செலவினத்திற்காக மானியம் கிடைத்தல் விரிவான வருமானங்கள் கூற்றில் குறிப்பு இலக்கம் 10 மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் தேறிய சொத்துக்கள்/உரிமைகளின் கீழ் வெளிப்படுத்த வேண்டியதுடன், மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 60,214,195 ஆன எந்தவொறு மூலதன கிடைப்பனவும் அவ்வாறு கணக்குகளில் காட்டப்படவில்லை. | புதிய கணக்கு முறைமை தொடர்பாக உரிய பயிற்ச்சியை பெற்றில்லாததால் உரியவாறு கணக்குகளை தயாரிக்க முடியாதுள்ளது என அறிவிக்கிறேன். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு மற்றும் உள்ளூராட்சி |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நியமங்களிற்காக விரிவான விளக்கமளித்தல்களில் உள்ளங்கிய EG3.3 பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத் தேய்விட வேண்டிய போதும் மீளாய்வாண்டில் சபையின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத் தேய்விடப்பட்டு இடப்பட்டிருக்காததுடன் கணக்கீட்டு கொள்கைகளிலும் சொத்துக்கள் பெறுமானத் தேய்விடும் அடிப்படைகள் பற்றி காட்டி இருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது பெறுமான தேய்வு நடவடிக்கையை நாளாதுவரையாக மேற்கொள்ள முடியும் என அறிவிக்கிறேன். | அணையாளரின் சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நியமம் இலக்கம் 3.5 பிரகாரம் LGD/10A/4/ந.கி/2019 கொண்ட உள்ளூராட்சி அணையாளரின் 2021 பெப்ரவரி 12 திகதி கடிதம் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் 14 வகைகளின் கீழ் வகைப்படுத்த வேண்டிய போதும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்கள் வகைப்படுத்தல் 10 வகைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன் கணனி மற்றும் உதிரிப்பாகங்கள், தளபாடங்கள் மற்றும் உபகரண கணக்கினுள் காட்டப்பட்டிருந்தது. | கணனி மற்றும் உதிரிபாகங்கள், தளபடங்கள் மற்றும் உபகரணங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் வகைப்படுத்துதல் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்ததன் பின்னர் எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக அறிவிக்கிறேன். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வுஅவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டில் ரூபா 11,000 யிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்த காணியொன்று மீளாய்வாண்டின் ரூபா 300,000 இற்கு மீள்மதிப்பீடு செய்திருந்தமை, திரண்ட நிதியத்தினூடாக செம்மையாக்குவதற்கு பதிலாக காணி கணக்கிற்கு வரவு வைத்து மீண்டெழும் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் காணிகளை துண்டாக்கி விற்பனை செய்யும் போது சபைக்கு கிடைத்தருந்த 03 ஏக்கர் 03 ரூட் 25.72 பர்சஸ்ான 12 பொதுக் காணி பங்குகளின் பெறுமதி சபையின் ஆதன, பொறி மற்றும் உபகரணங்களாக கணக்கிட்டு கணக்கீடு செய்யதிரருக்கவில்லை. | கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கடந்த ஆண்டில் திசெம்பர் மாதத்தில் அறிவித்தல் வெளியிடுவதற்காக செலுத்த வேண்டிய ரூபா 74,817 இனை மீளாய்வாண்டு செலவினமாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கடன்கொடுனர் ஒதுக்கீடு செய்ய தவறியுள்ளதால் 2021 ஆண்டின் ஏற்பாடுகளிலிருந்து கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | சபைக்கு கிடைத்துள்ள பொது காணி பங்குகளில் பெறுமதியான ரூபா 3,039,000 இனை ஜர்னல் குறிப்பு ஊடாக மீண்டெழும் பெறுவனவாக மீண்டெழும் செலவினத்திற்காக அரசினாலான ஒப்படையின் கீழ் விரிவான வருமான கூற்றில் 04 ஆம் இலக்க குறிப்பின் கீழ் கணக்கீடு செய்த காரணத்தால் மீண்டெழும் வருமானம் அப் பெறுமானத்தால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆண்டு கணக்கு தயாரிக்கும் போது சரி செய்வதாக அறிவிக்கிறேன். | |
| (உ) | மீளாய்வாண்டினுள் மூலதன செலவின அன்பளிப்பாக கிடைத்த ரூபா 57,165,195 இனை விரிவான வருமான கூற்றில் 10 ஆம் இலக்க குறிப்பின் கீழ் வெளிப்படுத்த வேண்டிய போதும் அவ்வாறு வெளிப்படுத்தாது 5 ஆம் இலக்க குறிப்பு ஊடாக வருமானத்தற்கு இனங்காணல் செய்யப்பட்டிருந்ததுடன் அனைத்து மூலதன அன்பளிப்புக்களும் மீளாய்வாண்டு வருமானத்திற்கு இனங்காண்டுள்ளதால் ஆண்டில் மிகை அப் பெறுமானத்தால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே அப் பெறுமதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் தேறிய சொத்துக்களின் கீழும் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக கணக்குகள் தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | குறிப்பு இலக்கம் 09 இன் கீழ் காட்ட வேண்டிய நிதிசார் கிரயம் ரூபா 2,149,394 இனை குறிப்பு இலக்கம் 8 இன் கீழ் காட்டி குறிப்பு இலக்கம் 09 இற்காக வெற்று அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (எ) | விநியோகிக்கப்பட்ட போதும் செலவின விடயத்திற்கு மாற்றப்படாத மற்றும் கொள்வனவு செய்த பெறுமதிக்கு குறைவாக செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்த களஞ்சிய பொருட்களின் பெறுமதியான ரூபா 456,380 இனை ஜர்னல் குறிப்பு ஊடாக சரிசெய்கையில் செலவின விடயத்திற்கு வரவு வைப்பதற்கு பதிலாக திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டு பொது களஞ்சிய கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் அப் பெறுமதியால் திரண்ட நிதியம் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தவறுதலாக திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | வாகன தரிப்பிடமொன்றை அமைக்கும் செலவினமான ரூபா 550,000 இனை மூலதனமாக்காது பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்ததில் மிகை மற்றும் கட்டிட கணக்கு அப்பெறுமானத்தால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சரியாக கணக்குகள் தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக அறிவிக்கிறேன | |
| (ஐ) | தார் இடலுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 107,090 மற்றும் பாதைகளிற்கு பிரிமிக்ஸ் இடுவதற்காக ரூபா 1,000,000 இனை மூலதனமாக்காது பழுதுபார்தல் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஒ) | உள்ளூராட்ச்சி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 22 திகதிய மற்றும் இலக்கம் LGD/10A/4/ந.கி/2019 கொண்ட சுற்றறிக்கையின் 02 பிரிவு பிரகாரம் உரிமை மாற்றல் கூற்றில் ஒதுக்கத்தின் கீழ் காட்டப்பட வேண்டிய மீதி இணங்காமை ரூபா 1,231,339 இனை குறிப்பு இலக்கம் 14 இருப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2022 அண்டில் இறுதி கணக்குகள் ஊடாக சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | |
| (ஓ) | ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் பாதைகள், பாலம் மற்றும் மதகுகளின பெறுமதி ரூபா 38,617,434 இனை கணக்கீடு செய்திருந்ததுடன் அவற்றில் மீளாய்வாண்டு இறுதியில் உடன்படிக்கை மாத்திரம் இடம்பெற்றிருந்த ரூபா 18,080,000 ஆன 30 கருத்திட்டங்களிற்குரிய பெறுமதிகள், நடைமுறை வேலைகளின் கீழ் கணக்கீடு செய்வதற்கு பதிலாக ஆதன மற்றும் பொறிகள் மற்றும் உபகரணமாக கணக்கீடு செய்திருந்ததால் அப் பெறுமதியால் அக் கணக்கு கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2022 அண்டில் இறுதி கணக்குகள் ஊடாக சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும |
| (ஔ) | தேறிய சொத்துக்கள்/ உரிமை மாற்றல் கூற்றில் 2020 சனவரி 01 திகதியன்று திரண்ட நிதிய மீதிக்கு கணக்கீட்டு கொள்கையின் தவறுகளை செம்மையாக்கி மற்றும் ஆண்டின் விரிவான வருமானத்தை கூட்டிய போது கிடைக்கும் மீதிக்கு மீளாய்வாண்டில் விரிவான வருமானத்தை செம்மையாக்கிய பின்னர் மீளாய்வாண்டு இறுதியில் திரண்ட நிதியத்தின் மீதியை காட்ட வேண்டிய போதும் திரண்ட நிதியத்தின் ரூபா 1,101,440,267 ஆன மீதியை முன்வைத்துள்ள உரிமை மாற்றல் கூற்றினூடாக செம்மையாக்கி சமர்பித்திருக்கவில்லை. | புதிய கணக்கீட்டு முறைமை தொடர்பாக உரிய பயிற்சி ஒன்றை பெற்றிருக்காததார் சரியான முறைப்படி கணக்குகளை தயாரிக்க இயலாதுள்ள என அறிவிக்கிறேன். | |

| | | |
|---|---|---|
| (க) பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான எந்தவொறு ஏற்பாட்டையும் முன்கொண்டுவர இல்லையென கட்டான பிரதேச செயலாளரினால் 2021 ஜுலை 13 திகதி மற்றும் 2022 மார்ச் 22 திகதிய கடிதங்களின் மூலம் அறிவித்திருக்கையில் றத்தொழுகம பொது விளையாட்டு மைதானத்தில் உடல் விருத்தி உபகரணங்களை பொருத்தும் கருத்தட்டத்திற்கான ரூபா 150,000 தொகையை கடன்கொடுனர் மற்றும் படன்படுனராக மீளாய்வாண்டில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | ஆண்டிறுதியில் கடன்கொடுனர் பதிவேட்டிற்கு உள்ளடக்கியுள்ளது பிரதேச செயலாளரினால் மீள்நிரப்பப்பட்டால் செலுத்தும் நோக்கத்துடன் என அறிவிக்கிறேன். | |

**1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டியுள்ள 12 கணக்கு விடயங்களில் 2021 திசெம்பர் 31 திகதிக்கு கணக்கு மீதி மற்றும் துணை பதிவேடுகள் பிரகாரம் மீதிகளிக்கிடையில் ரூபா 24,649,821 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் ஆண்டில் சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். | குறித்த மீதிகளில் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்கை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.4 பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 2017 முதல் 2020 ஆண்டு வரையான காலத்திற்குரிய நானாவித வைப்பிலுள்ள வீதவரி மிகைக் கட்டணம், ரூபா 321,301 மீதிகளை இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன் | சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவிவரும் ரூபா 119,957 ஆன வேலை முற்கொடுப்பனவு தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பல ஆண்டுகளிற்கு முன்னரிலிருந்து நிலவிவரும் மீதியொன்றாகும் என அறிவிக்கிறேன். | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளை முன்வைக்காத காரணத்தால் ரூபா 3,804,846 ஆன சொத்துக்களை ஒப்பாய்வு செய்ய முடியவில்லை

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 182 பிரிவு | உள்ளூராட்சி அணையாளரின் LGD/06/02/04 பொது மற்றும் 2020 ஜுன் 09 திகதிய கடிதம் பிரகாரம் கடையறைகளை மூடி வைப்பது தொடர்பாக சலுவை வழங்கும் போது விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழாக வேண்டிய போதும் அதன் பிரகாரம் அவ்வாறான அங்கீகாரம் இன்றி வாராந்த சந்தையை குத்தகைக்கு வழங்கி கிடைக்கவிருந்த வாடகை வருமானத்தில் 50 சதவீதம் அதாவது ரூபா 62,854 ஆன தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது. | விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை அரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 396 | விநியோகித்து 06 மாதங்கள் கடந்திருந்த போதும் வங்கிக்கு சமர்பிக்கப்படாத ரூபா 214,960 ஆன 15 காசோலைகள் தொடர்பாக குறித்த பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | குறித்த பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 570 (இ) மற்றும் 571 (3) | வைப்புச் செய்து 2 வருடங்களை விஞ்சிய ரூபா 9,266,944 ஆன வைப்புக்கள் த்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | தொடர்புடைய பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 2020 ஆகஸ்ட் 24 திகதிய LGD/09/2019 (I) சுற்றறிக்கை | எல் ஜீ 21/2 படிவத்தில் காட்டப்பட்டுள்ளவாறு மாகாண அரச அலுவலர்களின் முற்பண பீ கணக்கின் எல்லைகளை அங்கீகரித்துக் கொள்ள வேண்டிய இருந்த போதும் இச் சபையினால் முற்பணக் கணக்கு எல்லைகளை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்காததுடன் நிதிக்கூற்றுக்களுடன் முற்பண பீ கணக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் பொதுச் சபைக்கு முற்பணக் கணக்கு எல்லைகளை அங்கீகாரத்திற்கு சமர்பித்து கணக்கயாவிற்கு அறிக்கையிடுவதாக அறிவிக்கிறேன். | தொடர்புடைய சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 167,365,734 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 220,682,923 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

**வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் இருந்த ரூபா 35,023,000 ஆன வீதவரி நிலுவையிலிருந்து மீளாய்வாடில் ரூபா 12,702,542 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததால் நிலுவை அறவிடல் பலவீனமான நிலையில் இருந்தது. | நிலுவை வீதவரி அறவிடும் முன்னேற்றத்தை வெற்றிகரமான நிலைக்கு அடைந்து கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கின்றேன். | நிலுவை வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | அக்கரப பனஹ கிராம உத்தியோகத்தர் பிரிவில் சம்பத் பிரதேசத்தில் அமைந்துள்ள 17.5 பர்சஸ் அளவான பொதுக் காணித் பகுதியை 1994 ஜுன் 27 திகதி சட்ட ரீதியாக சபைக்கு ஒப்படைத்திருக்கையில் சபை ஆதனங்களை வெளித் தரப்பினரால் பல வருடங்களாக பயன்படுத்துவதுடன் சபைக்கு சொந்தமான ஆதனங்களை பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நீதிவான் நீதிமன்றத்தில் இதற்காக வழக்கொன்றை தாக்கல் செய்து தற்போது விசாரிக்கப்படுவதாக அறிவிக்கிறேன். | சபையின் ஆதனங்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பரகஹவத்த எஸ்டேட் எனும் ஏலவிற்பனை காணியின் 45 பர்சஸ் ஆன பொதுக் காணித் துண்டை 1995 ஆண்டில் சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்காததால் அன்மித்த காணி உரிமையாளர் ஒருவரால் அவரின் காணிக்கு செல்வதற்கான பாதையொன்றாக இக் காணியை பயன்படுத்தி கொன்கிரீட் அடிப்பாதையொன்றை இட்டு அவரின் காணிக்கு பிரவேசமொன்றை பெற்றிருந்தார். | அத் திட்டத்தின் தவறை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கின்றேன். | சபையின் ஆதனங்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | றத்தொழுகம வீடமைப்பு கட்டிடத் தொகுதியினுள் அமைந்துள்ள பூங்கா, முன்பள்ளி மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு மத்திய நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணித் துண்டை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் 2008 ஆண்டு உறுதி மூலம் சபைக்கு ஒப்படைத்துள்ளதாகவும் அந்த சொத்தை நலன்புரி சங்கமொன்றினால் வேறு தரப்பினர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கி வருமானம் ஈடுவதாக அவதானிக்கப்பட்டது. | சபையின் கட்டுப்பாட்டின் கீழ் முன் நடவடிக்கை எடக்கப்படும் விதம் தொடர்பாக குழுவொன்றை நியமித்து செயற்படுத்திக் கொண்டிருப்பதாக அறிவிக்கிறேன். | சபை சொத்துக்களை அனுமதியின்றிய பாவனை தொடர்பாக சட்டம் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2001 – 2015 ஆண்டு காலத்தினுள் ஊழயர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்தும் தாமதத்தின் மீது நிதியத்தினால் செலுத்தியிருந்த ரூபா 275,874 ஆன மிகை அறவீட்டுத் தொகையை அறவிட மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல செய்து பொறுப்புவாய்ந்த அலுவலர்களிடமிருந்து அறவிட இயலுமை காணப்படுவதாக கம்பஹ மாவட்ட பிரதி உள்ளூராட்சி ஆணையாளரின் 2021 ஏப்ரல் 19 திகதிய மற்றும் இலக்கம் | தற்போது அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. | பொறுப்புவாய்ந்த அலுவலர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

LGD/GM/1/7/பொது/D-14/2021 கொண்ட கடிதம் மூலம் அறிவித்திருந்த போதும் 2022 சனவரி 22 அளவிலும் அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| ஹெரிடேஜ் குரோவ் கருத்திட்டத்தில் காணிகளை துண்டாக்கி விற்பனை செய்வதன் மீதான 1 சதவீத வரியாக 2016 ஜுலை 21 திகதி ரூபா 2,376,460 தொகையை ஏலவிற்பனையாளரிடமிருந்து பெறப்பட்டிருந்தது. குறித்த கருத்திட்டத்தை இடைநிறத்தியிருந்த காரணத்தால் 1 சதவீத வரித் தொகையை விடுவித்து தருமாறு ஏலவிற்பனையாளர் 2021 மே 21 திகதி கோரியிருந்த போதும் அதற்கு முன்னர் சபையினால் 1 சதவீத வரித் தொகையை செலுத்தி விடுவிக்கும் முன்மொழிவை நிதி மற்றும் கொள்கை திட்டமிடல் குழுவிற்கு 2021 ஏப்ரல் 23 திகதி சமர்பித்து அதன் பரிந்துரையை 2021 மே 17 திகதி பொது சபைக்கு முன்வைக்கவும் நடவடிக்கை எடுத்திருந்தமை சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயமொன்றானது. அவ்வாறே இந்த 1 சதவீத விற்பனையின் மீதான வரித் தொகையை 2021 ஜுலை 07 திகதி சபையின் காப்பு அங்கீகரத்தின் கீழ் தவிசாளரினால் அவரின் ரூபா 15 இலட்ச நிதி எல்லையை விஞ்சிய ரூபா 23 இலட்சமான அவசர கொடுப்பனவாக ஏலவிற்பனையாளருக்கு மீள் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் ஏலவிற்பனையாளரினால் சபைக்கு ஒப்படைத்திருந்த பொது காணியை ஒப்படை உறுதியொன்றின் மூலம் 2021 ஜுலை 07 திகதி மீண்டும் ஏலவிற்பனை கம்பனின்கு ஒப்படைத்திருந்ததுடன் 1987 இன் 15 இலக்கம் கொண்ட பிரதேச சபை சட்டத்தின் 19(x) பிரிவிற்கு முரணாக இவ் ஒப்படைத்தல் செய்யப்பட்டிருந்தது. | உள்ளூராட்ச்சி ஆணையாளரின் சட்டரீதியான ஆலோசனையை பெற்றுக்கொள்வதற்காக பரிந்துரைத்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அவ் 1 சதவீத விற்பனையின் மீதான வரித் தொகையையான ரூபா 2,376,460 ஆன காசோலையை குறித்த கம்பனியினால் பெற்றுக் கொண்டு வவுசர் பத்திரத்தில் கையொப்பமிட்டு அனுப்பியுள்ளதுடன் பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ள 2022 ஜுலை 11 திகதி கடிதமொன்றை அனுப்பியுள்ளதுடன் பற்றுச்சீட்டு கிடைத்தவுடன் கணக்காய்விற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் பரிந்துரை பிரகாரம் மற்றும் பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**பயன்படுத்தாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| வலிசிங்ஹஹரிஸ்சன்திர விளையாட்டு அரங்கின் நடைபாதையை பயன்படுத்து நபர்களில் பொருட்களை வைத்துக் கொள்ள 2014 ஆண்டளவில் நிர்மாணித்திருந்த 24 அடி 09 அங்குல நீள மற்றும் 21 அடி அகலமான கட்டிடமொன்று எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்காது கைவிடப்பட்டிருந்ததுடன் அதன் செலவுகள் தொடர்பாக சபையில் அறிக்கையொன்று இருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதி ஒதுக்கிக் கொண்டு முழுமையாக பூர்த்தி செய்து கேட்போர்கூட கட்டத்தின் வசதிகளுக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மேலும் அறிவிக்கிறேன். | உரியவாறு திட்டமிட்டு சமர்பிக்க வேண்டும். |

**3.4 ஏற்பாடு வழங்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 2021 ஆண்டில் வெளி ஏற்பாட்டின் மூலம் கருத்திட்டததை செயற்படுத்த குறைநிரப்பு மதிக்பீடு சபையூடாக அங்கீகரித்திருக்காத போது, அவ் ஏற்பாட்டின் மூலம் செயற்படுத்தப் படும் 66 கருத்திட்டங்கள் உடன்படிக்கை செய்து செயற்படுத்தியிருந்தது. பின்னர் தவிசாளரின் பரிந்துரையின் மீது ரூபா 48,174,770 ஆன கருத்திட்ட செலவிற்காக குறித்த ஒப்பந்ததாரருக்கு கொடுப்பனவு செய்ய கடன்கொடுனர் ஓதுக்கியிருந்ததுடன் 2022 மார்ச் 30 திகதியளவிலும் இதற்காக கொடுப்பனவு செய்ய முடியாதிருந்தது. | சபையினால் குறித்த ஆண்டினுள் உடன்படிக்கை செய்து செயற்படுத்திய கருத்திட்டங்களிற்காக கொடுப்பனவு செய்ய அதன் போதைய தவிசாளரினால் பரிந்துரையை பெற்றுள்ளதாக அறிவிக்கிறேன். | உடன்படிக்கை செய்ய முன்னர் அதற்காக வரவு செலவு திட்ட ஏற்பாட்டை பெற்றக் கொள்ள வேண்டும். |

**3.5 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 10,000 லீட்டர் கழிவற்றும் கலிபவுசர் ஒன்றை கொள்வனவு செய்ய மதிப்பீட்டுக் குழு பரிந்துரையின் பிரகாரம் ரூபா 12,956,400 தொகைக்கு தனியார் கம்பனியொன்றில் கட்டளை வழங்கியிருந்ததுடன் அந்த வகையான அந்த நாடுகளில் உற்பத்திக்காக வேரொறு கம்பனியிடமிருந்து (முகவர் கம்பனி) ரூபா 11,800,000 இற்கு முன்வைத்திருந்த விலைமனு நிராகரிக்கப்பட்டிருந்தது. தெரிவு செய்யப்பட்ட கம்பனி கல்பவுசரிற்கு லொரி வண்டியை வழங்குவது நிராகரித்துள்ள முகவர் கம்பனியின் மூலம் கட்டளையிட்ட பின்னரானதால் இந்த கொள்வனவை இதுவரை சபைக்கு செய்து கொள்ள சபைக்கு இயலாதிருந்தது. | அரசினால் விதித்த இடைக்கால தடை உத்தரவொன்றினால் இது வரை கொள்வனவு செய்ய இயலாதுள்ளதாகவும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் தீர்மானித்துள்ள தகைமையுடைய நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளதாக அறவிக்கிறேன். | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

விலைமணுக்களில் குறிப்பிடப்படும் நிபந்தனை 6 பிரகாரம் பெற்றுக் கொள்ள வேண்டிய செயலாற்றுகை பிணைமுறியை பெற்றிருக்காததுடன் செயற்பாட்டை மேற்கொள்ளாததனால் பெற்றிருந்த ரூபா 90,000 ஆன விலைமணு பிணைமுறியை வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 திகதி இடமாறிச் சென்ற அலுவலர் ஒருவரிடமிருந்து ரூபா 212,500 தொகையும், ஓய்வுபெற்ற 05 அலுவலர்களிடமிருந்து ரூபா 542,252 தொகை மற்றும் கடமையை விட்டுச் சென்ற 05 அலுவலர்களிடமிருந்து ரூபா 680,410 தொகையுமாக கூட்டுத் தொகை ரூபா 1,435,162 ஆன கிடைக்க வேண்டிய கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | தற்போது ஊழியர் கடன் பதிவேட்டை தயாரித்துள்ளதாக அறிவிக்கிறேன். | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |